**Dated : 03.03.2026** (நேரம் : நண்பகல் 12.25 மணி)

**MCOP. No: 139/2025**

**எ.ம.சா. 2 திரு. விஜயகுமார்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை –**

நான் காவல் துறையில் காவலராக பணியாற்றுகிறேன். TN 59 AK 7999 என்ற பதிவெண் கொண்ட கார் எனக்கு சொந்தமானது தான். இந்த விபத்து சம்பந்தமாக என் மீது தான் திருப்புல்லாணி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயம் நான் கீழக்கரையிலிருந்து இராமநாதபுரம் நோக்கி வந்தேன். மனுதாரர் இராமநாதபுரத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் கீழக்கரை நோக்கி வந்தார். விபத்து நடந்த சாலை இராமநாதபுரத்திலிருந்து தூத்துக்குடிக்கு செல்லும் கிழக்கு கடற்கரை சாலை என்றால் சரிதான். அந்த சமயம் நான் என்னுடைய சொந்த வேலையாக தான் காரில் சென்றேன். அந்த சமயம் நான் மதுபோதையில் அதிவேகமாக காரை ஓட்டிச்சென்றேன் என்றால் சரியல்ல. நான் ரோட்டின் நடுவில் உள்ள வெள்ளைக்கோட்டை தாண்டி வலதுபுறமாக தவறான திசையில் காரை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்பந்தமாக என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதற்கு எதிராக விபத்திற்கு நான் காரணமில்லை என்று கூறி நீதிமன்றம் மூலமோ, உயர் அதிகாரிகள் மூலமோ நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு முழுக்க முழுக்க என்னுடைய கவனக்குறைவும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்றும், அதனால் தான் நான் அவ்வாறு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரர் குடிபோதையில் இருந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வாகனத்திற்கு நான் காப்பீடு

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.03 17:10:13 +0530

சான்று பெறவில்லை என்றால் அந்த வாகனத்தை அப்போது தான் புதிதாக வாங்கியிருந்ததால் காப்பீடு சான்று பெறவில்லை. விபத்தானது என்னுடைய அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்பட்டுள்ளதால் மனுதாரருக்கு நான் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக போலீசார் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகிய ஆவணங்களை என்னுடைய தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த ஆவணங்கள் அனைத்தும் எனக்கு எதிராக உள்ளது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு நான் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.03 17:10:18 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.